# JK செய்திகள்

2021/22 3 வது காலாண்டு - ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் செய்திகள்



# பணிப்பாளர் சபைத் தலைவரின் செய்தி

2021 ஜுன் 30 இல் நிறைவடைந்த 3 மாத காலப்பகுதிக்கான JKH காலாண்டு நிதிநிலைகளின் சாராம்சம்:



**கிறிஷான் பாலேந்திரா**
குழுமத்தலைவர்

- மீளாய்வு செய்யப்படும் காலாண்டில் குழுமத்தின் வட்டி, வரி, தேய்மானம் மற்றும் தள்ளுபடி ஆகியவற்றுக்கு முந்திய வருவாய் (EBITDA) கணிசமாக மேம்பட்டு ரூபா 4.76 பில்லியன் தொகையாகப் பதிவாக்கப்பட்டுள்ளது.
- முன்னைய ஆண்டின் முதலாவது காலாண்டுடன் ஒப்பிடுகையில் நுகர்வோர் உணவுகள் தவிர்ந்த குழுமத்தின் ஏனைய வணிகங்கள் இலாபத்திறனில் மேம்பாட்டை பதிவாக்கியுள்ளன.
- ‘Cinnamon Life’ குடியிருப்பு அடுக்குமனைகளைக் கையளிக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளதுடன், இச்செயற்திட்டத்தின் பேரில் முதற்தடவையாக விற்பனைகள் மூலமான வருமானம் மற்றும் இலாபங்கள் பேரேடுகளில் கணக்கு வைக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- குழுமத்தின் துறைமுக வணிகமான SAGT, கையாண்ட அளவுகளில் மிகவும் ஊக்கமளிக்கும் வகையில் இரட்டை இலக்க வளர்ச்சியின் உந்துசக்தியுடன் முன்னைய நிதியாண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இலாபத்திறனில் அதிகரிப்பை பதிவாக்கியுள்ளது.
- கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்து, தொழிற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆர்வ வெளிப்பாட்டு ஆவணம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, இந்த ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- சுப்பர்மார்க்கெட் வணிகத்தின் பெறுபேற்றுத்திறன் மூன்றாவது அலை பரவ ஆரம்பிப்பதற்கு முன்னர் விற்பனை மையங்களின் விற்பனை நடவடிக்கைகளில் அதே இரட்டை இலக்க வளர்ச்சியுடன் காலாண்டு தோறும் மீட்சியடைந்து, தொடர்ந்து வலுவான மேம்பாடு கண்டுள்ளது.
- Office Automation வணிகமானது மொபைல் தொலைபேசிப் பிரிவில் அளவுகளில் மூன்று இலக்க வளர்ச்சியின் உந்துசக்தியுடன் இலாபத்திறனில் வலுவான அதிகரிப்பினை பதிவாக்கியுள்ளது.
- பான வகைகள், உறைவிக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் மற்றும் சௌகரிய உணவுகள் வணிகங்கள் மூன்றும் தத்தமது பிரிவுகளில் அளவுகளில் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவாக்கி, வலுவான மீட்சி உந்துசக்தியை தொடர்ந்துள்ளன.
- மாலைதீவு உல்லாச விடுதிகள் பிரிவானது முன்னைய காலாண்டிலிருந்து தொடர்ந்தும் தனது மீட்சி உத்வேகத்தைத் தொடர்ந்துள்ளதுடன், இக்காலாண்டில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் கூடுதலான விருந்தினர்கள் எமது ஹோட்டல்களில் தங்கியுள்ளனர்.
- வலுவான கடன் வளர்ச்சி மற்றும் இலாப மட்டங்களின் தாக்கத்திற்கு மத்தியிலும் குறைந்த வலுக்குறைப்புக் கட்டணங்களின் உந்துசக்தியுடன் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சி அதிகரித்த இலாபத்திறனை பதிவாக்கியுள்ளது. யூனியன் அஷ்ரன்ஸ் பீஎல்சி அனைத்து மார்க்கங்களிலும் ஈட்டிய வளர்ச்சியின் உந்துசக்தியால் அதிகரித்த இலாபத்திறனை பதிவாக்கியுள்ளது.

| வட்டி, வரி, தேய்மானம் மற்றும் தள்ளுபடி ஆகியவற்றுக்கு முந்திய வருவாய் (EBITDA)* (ரூபா.’000) | ஜுன் 30 இல் நிறைவடைந்த காலாண்டு | | |
|---|---|---|---|
| | 2021/22 1 ஆவது காலாண்டு | 2020/21 1 ஆவது காலாண்டு | % |
| போக்குவரத்து | 1,023,326 | 394,743 | 159 |
| நுகர்வோர் உணவுகள் | 317,682 | 487,149 | (35) |
| சில்லறை வணிகம் | 1,562,792 | 501,851 | 211 |
| பொழுதுபோக்கு | (648,773) | (1,461,187) | 56 |
| ஆதனம் | 542,404 | (28,881) | 1,578 |
| நிதியியல் சேவைகள் | 769,679 | 536,726 | 43 |

- தலா மில்லியன் ரூபா வருமானத்திற்கான குழுமத்தின் காபன் அடிச்சுவடானது 21 சதவீதத்தால் குறைவடைந்து, 0.59 மெட்ரிக் தொன்னாக பதிவாகியுள்ளதுடன், தலா மில்லியன் ரூபா வருமானத்திற்கான தண்ணீர் பாவனை 34 சத வீதத்தால் குறைவடைந்து, 12.10 கன மீட்டர்களாக பதிவாக்கப்பட்டுள்ளது.

* வட்டி, வரி, தேய்மானம் மற்றும் தள்ளுபடி ஆகியவற்றுக்கு முந்திய வருவாய் ஆனது வட்டி வருமானம் மற்றும் வரிக்கு பின்னரான இலாபப் பங்கின் அடிப்படையில் முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்களுக்காக கணக்கு வைக்கப்பட்ட பங்குப் பெறுபேறுகளின் பங்கு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளதுடன், வணிகத்தின் பணத் தொழிற்பாட்டு பெறுபேற்றுத்திறனை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தப்பட்ட அதன் வெளிநாட்டு நாணய வடிவிலான கடன் மற்றும் பணம் மீதான நாணய மாற்று இழப்புக்கள் மற்றும் ஆதாயங்களின் தாக்கம் உள்ளடக்கப்படவில்லை.

# விருதுகள் மற்றும் பாராட்டுக்கள்

LMD சஞ்சிகையால் 2021 ஆகஸ்ட் 3 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட இலங்கையிலுள்ள மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்களின் தரப்படுத்தலில் 16 ஆவது ஆண்டாகவும் 1 ஆவது ஸ்தானத்தை தக்க வைத்து ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீஎல்சி சாதனை படைத்துள்ளது. மேலும், நிதியியல் பெறுபேற்றுத்திறன், தரம் மீதான கவன உணர்வு, முகாமைத்துவ தோற்றம், நேர்மை, புத்தாக்கம், முனைப்புடைமை, நிறுவன கலாச்சாரம், வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு மற்றும் நிலைபேண்தகமை, குறிக்கோள், தேசிய கண்ணோட்டம், மனித வளம் மற்றும் பணியாளர் முகாமைத்துவம் மற்றும் நெருக்கடி முகாமைத்துவம் ஆகிய அனைத்து 12 பண்புக்கூறுகளின் தரப்படுத்தலிலும் JKH 1 ஆவது ஸ்தானத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.




2021 ஆகஸ்ட் 16 அன்று இடம்பெற்ற Insurance Asia Awards நிகழ்வில் ஆண்டின் மிகச் சிறந்த உள்நாட்டு ஆயுள் காப்புறுதி சேவை வழங்குனர் யூனியன் அஷ்ரன்ஸ் பீஎல்சி அங்கீகாரம் பெற்றுள்ளதுடன், யூனியன் அஷ்ரன்ஸ் நிறுவனத்தின் டிஜிட்டல் ஆயுள் காப்புறுதி தீர்வான Clicklife ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையில் வருடத்தின் மிகச் சிறந்த புதிய காப்புறுதித் தீர்வாகவும் பெயரிடப்பட்டுள்ளது. தன்னுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் அதிசிறந்த பெறுமதியை வழங்கும் அதனது அவதானம்மிக்க முயற்சிகளுக்காக யூனியன் அஷ்ரன்ஸ் Insurance Asia இடமிருந்து அங்கீகாரம் பெற்றுள்ளது.




2021 செப்டெம்பர் 8 ஆம் திகதியன்று The Pacific Asia Travel Association (PATA) Gold Awards நிகழ்வில் “Cinnamon Travel Pledge“ முயற்சிக்காக நிலைபேண்தகமை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு என்ற பிரிவின் கீழ் PATA Grand Award விருதை Cinnamon Hotels & Resorts பெற்றுள்ளது. இந்த ஆண்டு விருது வழங்கல் நிகழ்வில் அங்கீகாரம் பெற்றுள்ள ஒரேயொரு இலங்கை நிறுவனம் சினமன் என்பதும் குறிப்பிடத்தக்கது.







யூனியன் அஷ்ரன்ஸ் பீஎல்சி ஆனது Great Place to Work® வெளியிட்டுள்ள 2021 ஆம் ஆண்டிற்கான தரப்படுத்தலில், பாரிய நிறுவனங்கள் பிரிவில் இலங்கை தரப்படுத்தல்களில் 9 ஆவது ஸ்தானத்திலும், ஆசியாவிலுள்ள மிகச் சிறந்த பணியகங்கள் என்ற தரப்படுத்தலில் 70 ஆவது ஸ்தானத்திலும் தற்போது இடம்பெற்றுள்ளது. இந்த அங்கீகாரம் 2021 ஜுலை 20 அன்று வழங்கப்பட்டுள்ளதுடன், விருதுகள் வழங்கும் நிகழ்வானது 2021 ஆகஸ்ட் 10 அன்று இடம்பெற்றது.

வர்த்தக சமூக நலன்புரிச் செய்திகள்

## ஜோன் கீல்ஸ் ஆங்கில மொழி புலமைப் பரிசிலாளர்கள் முதலாவது மெய்நிகர் பேச்சுப் போட்டியில் மிளிர்ந்துள்ளனர்

2021 ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் Gateway Language Centre உடன் இணைந்து JKF நடாத்திய English for Teens திட்டத்தின் வுநைச 2 மாணவர்களுக்கான முதலாவது மெய்நிகர் ஆங்கில மொழி பேச்சுப் போட்டியின் இட வாரியான முதற்சுற்றுக்களில் 134 புலமைப்பரிசிலாளர்கள் பங்குபற்றியுள்ளனர். இந்த முதற்சுற்றுக்களுக்கான நடுவப்பணிகளை தன்னார்வத்தொண்டு அடிப்படையில் எமது பணியாளர்களான இமானி பெரேரா, இனீஷ்யா பெரேரா, டெசிறி க்ராஸ், கனிஷ்க ஹேரத், ரஸல் வலன்டைன் மற்றும் விஷாந்த் விஜேசிங்க ஆகியோர் மேற்கொண்டனர்.

134 புலமைப்பரிசிலாளர்கள் மத்தியில், கண்டி, ரஜவெல்ல, இரத்மலானை, பேருவளை, காலி, சூரியவெவ, திருகோணமலை, வவுனியா மற்றும் கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து 12 பேர் இறுதிப் போட்டியாளர்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டதுடன், “கொவிட்-19 தொற்றுநோயின் போது எனது அனுபவம்” என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி இடம்பெற்றது. இறுதிப்போட்டியானது 2021 ஆகஸ்ட் 17 அன்று இடம்பெற்றதுடன், JKF இன் தொழிற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியான கார்மலீன் ஜெயசூரிய, சினமன் ரெட் ஹோட்டலின் பொது முகாமையாளரான டெரன்ஸ் பெர்னாண்டோ ஆகியோர் நடுவர்களாக கலந்து கொண்டதுடன், போட்டியாளர்களின் முயற்சிகள் மற்றும் அவர்களின் திறமைகளின் தரத்தை வெகுவாகப் பாராட்டினர்.


காலியிலிருந்து பங்குபற்றிய புலமைப்பரிசிலாளர் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றதுடன், இரத்மலானை மற்றும் கொழும்பிலிருந்து கலந்து கொண்ட புலமைப்பரிசிலாளர்கள் முறையே 2 ஆவது மற்றும் 3 ஆவது இடங்களைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் தமது கல்வித் தேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உதவும் வகையில் புத்தகங்களை வாங்குவதற்கான வவுச்சர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## கொவிட்-19 தொற்றுநோயின் போது வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய உபகரணத்தை ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் வழங்கியுள்ளது

ஜோன் கீல்ஸ் பவுண்டே‘ன் ஆனது ChildFund இன் ‘Sri Lanka Gives Back’ பிரச்சாரத்துடன் ஒன்றிணைந்து, முல்லைத்தீவிலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலையின் புதிய கொவிட் சிகிச்சைப் பிரிவுக்கு ரூபா 275,000 பெறுமதியான நோயாளர்கள் தொடர்பில் பன்முக தகவல் விபரங்களைப் பெற உதவும் மின் திரை சாதனத்தை நன்கொடையளித்துள்ளது. முல்லைத்தீவில் JKF முன்னெடுத்திருந்த ஏழு ஆண்டு கால கிராம தத்தெடுப்பு செயற்திட்டம் அண்மையில் நிறைவடைந்துள்ள நிலையில், அதன் தொடர்ச்சியாகவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த சாதனமானது யூனியன் அஷூரன்ஸின் பிராந்திய விற்பனை முகாமையாளரான திரு. அரிராசா துஷ்யந்தன் அவர்களின் உதவியுடன் 2021 ஆகஸ்ட் 10 அன்று கையளிக்கப்பட்டுள்ளது.



ரணாலவில் ஜோன் கீல்ஸ் மக்கள் சக்தி முயற்சியின் ஒரு அங்கமாக JKF மற்றும் சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் ஆகியன ஒன்றிணைந்து, தற்போது கொவிட் சிகிச்சை வைத்தியசாலையாக தொழிற்பட்டு வருகின்ற நவகமுவ பிரதேச வைத்தியசாலைக்கு ரூபா 455,685 பெறுமதியான, பாரதூரமான சிகிச்சை தேவைப்படுகின்ற நோயாளர்களுக்கான 5 கட்டில்களுக்கு சுவர் ஒட்சிசன் தொகுதியும், கட்டிலுக்கு அருகில் பொருத்தப்படுகின்ற 5 ஒட்சிசன் வழங்கல் கட்டுப்பாட்டு சாதனங்களும் நன்கொடையளிக்கப்பட்டுள்ளன. இது 2021 ஆகஸ்ட் 22 அன்று கையளிக்கப்பட்டது.







## ஜோன் கீல்ஸ் மக்கள் சக்தி திட்டத்தின் கீழ் பெண் தொழில் முயற்சியாண்மைக்கு வலுவூட்டுதல்

ஜோன் கீல்ஸ் மக்கள் சக்தி திட்டத்தின் கீழ் பாலின வலுவூட்டலுக்காக ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் தற்போது வழங்கி வருகின்ற உதவிகளின் ஒரு பகுதியாக, கடுவெல பிரதேச செயலகம் மற்றும் சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் செயற்திட்ட அணி விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், 2021 ஜுலை 21 அன்று ரணாலவிலுள்ள பட்டேவல ரண்லிய மாதர் சங்கத்தின் 15 அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட ஆளுமை செயல்திறன் மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சரித் டி சில்வா, நதீஷா நிர்மலா மற்றும் மதுஷா விஜேரத்ன ஆகிய தன்னார்வத் தொண்டு வளவாளர்களால் நடாத்தப்பட்ட மெய்நிகர் நிகழ்வில் தொழில் முயற்சியாண்மை தொடர்பான அறிவு, சிறப்பான வாடிக்கையாளர் சேவை, அத்துடன் எதிர்கால வாய்ப்புக்களை எவ்வாறு இனங்காண்பது என்பது தொடர்பில் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பான சுய ஆய்வு தொடர்பில் வலுவூட்டப்பட்டுள்ளது.








## SKIP (முன்னேற்றத்திற்கான திறன்) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குழும வழங்குனர்களுக்கு அறிவூட்டுவதற்கு ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் மற்றும் கீல்ஸ் கைகோர்ப்பு

கீல்ஸ் வழங்குனர்களுக்காக நடாத்தப்பட்ட முன்னேற்றத்திற்கான திறன் என்ற நிகழ்ச்சித்திட்டமானது 2021 ஜுலை 15 அன்று நிகழ்நிலை நிகழ்வொன்றுடன் நிறைவுற்றதுடன், இதில் பங்கேற்றவர்களில் 11 பேர் இறுதிப் பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியெய்தியுள்ளனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் 36 மணி நேர காலம் கொண்டதாக அமைந்ததுடன், முன்னேற்றத்திற்கான திறன் குறித்த முன்னைய கற்கைநெறியானது வழங்குனர்களின் தேவைக்கேற்றவாறு தனிப்பயனாக்க முறையில் வடிவமைக்கப்பட்டு, படைப்பாக்க திறன்கள், பேரம்பேசும் திறன்கள் மற்றும் மின்னஞ்சல் பண்புக்கள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

ஜோன் கீல்ஸ் குழுமத்தினுள் வழங்கல் சங்கிலியில் தொழிற்பட்டு வருகின்ற, தொடர்புபட்ட தரப்பினர் மத்தியிலிருந்து இனங்காணப்பட்டவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்கு உதவ ஜோன் கீல்ஸ் பவுண்டேஷன் முன்னெடுத்து வருகின்ற ஒரு முயற்சியே முன்னேற்றத்திற்கான திறன் என்ற நிகழ்ச்சித்திட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு Gateway Language Centre செயல் வடிவம் கொடுத்துள்ளதுடன், வழங்குனர்கள் மத்தியில் காணப்படுகின்ற திறன் சார்ந்த இடைவெளிகளை பூர்த்தி செய்து, அவர்கள் வழங்கும் சேவையின் தரத்தை மேம்படுத்தி, தொற்றுநோய்க்குப் பின்னரான ஒரு சூழலில் அவர்களுடைய வருவாய் வாய்ப்புக்களை அதிகரிக்க உதவுவதே இதன் அடிப்படை நோக்கம்.







பணியாளர்கள் மத்தியில் பெண்களின் பங்குபற்றலை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன், ONE JKH முயற்சிகளின் கீழ் கவனம் செலுத்தப்படுகின்ற பிரதான விடயங்களில் ஒன்றாக **பெண்களை மையப்படுத்திய பயிற்சி** காணப்படுகின்றது. இதற்கு உதவ, பெண்களை மையப்படுத்திய கற்றல் முயற்சியான WOICE ஆனது ஜோன் கீல்ஸ் குழுமத்தில் பெண் பணியாளர்களுக்கு உந்துசக்தியளித்து, அறிவூட்டுவதற்காக 2021 ஜூலை 28 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அடிமட்டத்திலிருந்து ஆரம்பித்து எவ்வாறு தனது வர்த்தகநாமத்தை பெரும் சாம்ராஜ்யமாக கட்டியெழுப்பினார், பேரார்வம் எவ்வாறு பெரும் பலமாக மாறியது, இலக்குகளை அடையப்பெறுவதில் திடசங்கல்பம் மற்றும் விடா முயற்சி, மாறுபட்ட முயற்சிகளில் கால்பதித்தமை எவ்வாறு தனது தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்வில் உதவின என்பது தொடர்பில் இலங்கையின் புகழ்பூத்த தொழில் முயற்சியாளரான ஒடாரா குணவர்த்தன அவர்களின் அனுபவத்தை நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு இதில் பங்குபற்றியவர்களுக்கு கிடைத்திருந்தது. இந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டு, குழுமத்தின் கற்றல் மற்றும் மேம்பாட்டுகளுக்கான MS Stream தளத்தில் கிடைக்கப்பெறுகின்றது.



**தொழில்தருநர் துணையுடனான பிள்ளைப் பராமரிப்பு** என்பது பிள்ளைப்பேற்றுக்காக தாய் மற்றும் தந்தைக்கு வழங்கப்படும் விடுமுறை வசதியை மேலும் மேம்படுத்தி, தொழில்புரியும் பெற்றோருக்கும் உதவி, அவர்கள் மீண்டும் விரைவாக தமது பணிகளுக்கு திரும்புவதை மேம்படுத்துவதற்காக ONE JKH கவனம் செலுத்தியுள்ள மற்றுமொரு விடயமாகும். ஜோன் கீல்ஸ் குழும பெற்றோர்களுக்கிடையிலான வலையமைப்புத் தளமான "Parents Connect" என்பது குழுமத்தின் பணியாளர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. Parents Connect ஊடாக சமூக மருத்துவ நிபுணரும், இலங்கை சுகாதார அமைச்சின் பிள்ளைப் பராமரிப்பு, மேம்பாடு மற்றும் விசேட தேவைகள், குடும்ப சுகாதார பணியகத்தின் தேசிய செயற்திட்ட முகாமையாளருமான வைத்தியர் ஆசிரி ஹேவமாலகே அவர்களால் "தொற்றுநோயின் போது பிள்ளை வளர்ப்பு" என்ற தலைப்பில் இரு இணைய கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் முதலாவது அமர்வானது 13 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்களுக்காக 2021 ஜூலை 29 அன்றும் இரண்டாவது அமர்வானது 13 வயதிற்கு கீழ்ப்பட்ட பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்களுக்காக 2021 ஆகஸ்ட் 4 அன்றும் நடாத்தப்பட்டன.




2015 ஆம் ஆண்டு முதற்கொண்டு பணியாளர்கள் தொடர்பான அனைத்து கொள்கைகளிலும் "பாலியல் நோக்குநிலை" மற்றும் "பாலின அடையாளம்" ஆகிய சொற்பதங்களை உள்ளடக்கிய முதலாவது இலங்கை நிறுவனம் என்ற தனிச்சிறப்பினைக் கொண்டுள்ள ஜோன் கீல்ஸ் குழுமம், LGBTIQ எனப்படுகின்ற பாலின சமூகத்தை இன்னும் கூடுதலான அளவில் அரவணைக்கும் இடமாக பணியகத்தை மாற்றுவதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டில் EQUAL GROUND மூலமாக குழும வாரியான விழிப்புணர்வு அமர்வுகளையும் ஏற்பாடு செய்திருந்தது. அத்துடன் வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்புகளில் ஈடுபடும் பாத்திரத்தில் அதிகாரி தரத்தில் திருநர் பாலினத்தவர் ஒருவரை தொழிலில் அமர்த்திய இலங்கையின் முதலாவது நிறுவனம் ஜோன் கீல்ஸ் குழுமம் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருநர் பாலின சமூகத்தை அரவணைக்கும் வகையில் எமது பணியகத்தை மேலும் வலுவூட்டுவதற்காக, ஊழியர்கள் மத்தியில் கருத்துக்கணிப்பொன்றை முன்னெடுப்பதற்காக National Transgender Network (NTN) மற்றும் The Grassrooted Trust ஆகியவற்றுடன் குழுமம் கைகோர்த்திருந்தது. இந்த கருத்துக்கணிப்பு இரு பாகங்களைக் கொண்டிருந்ததுடன், 2021 ஜூலை 21 அன்று நிறைவுற்றது. 1 ஆவது கட்டமாக குழு வாரியாக மும்மொழியிலான நிகழ்நிலை வினாக்கொத்து அடிப்படையிலான கருத்துக்கணிப்பினை பூர்த்தி செய்த பின்னர், 2 ஆம் கட்டத்தின் கீழ் அதிகாரிகள் தரத்திலுள்ள மற்றும் அதிகாரிகள் தரத்தில் அல்லாத பணியாளர்களுக்கு மும்மொழியில் இலக்கு வைக்கப்பட்டு, முன்னெடுக்கப்பட்டது. இந்த கருத்துக்கணிவின் முடிவுகள் மற்றும் LGBTIQ சமூகத்துடனான முக்கிய தகவலாளர் நேர்காணல்கள் ஆகியவற்றுடன் திருநர் பாலின சமூகத்திற்கு தொழில்வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக பாராளுமன்றத்தில் சட்டமொன்று இயற்றப்படும் முயற்சியை முன்னெடுப்பதற்கு NTN திட்டமிட்டுள்ளது.




2021 ஜூனில் முன்னோடி அமர்வு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, **தன்னறிவுக்கு அப்பாற்பட்ட பாரபட்சம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அவற்றுக்குத் தீர்வு காணும்** நிகழ்நிலை கலந்துரையாளடல்கள் ONE JKH முயற்சிகளின் கீழ் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் குழுமத்திலுள்ள துணைத் தலைமை அதிகாரி மற்றும் அதற்கு மேற்பட்ட பதவி நிலைகளிலுள்ள அணிகளுக்காக முன்னெடுக்கப்பட்டுள்ளன. The Centre for Inclusive Leadership (ஐக்கிய இராச்சியம்), Bridge Partnership (ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் ஆசிய பசுபிக்), மற்றும் Kinetik Solutions (ஐக்கிய இராச்சியம்) போன்ற பல்வேறுபட்ட பயிற்சி மற்றும் ஆலோசனை நிறுவனங்களுடன் இணைப்பினைக் கொண்டுள்ள கேஷினி ஜெயவர்த்தன அவர்கள் இந்த கலந்துரையாடலை நெறிப்படுத்தியிருந்தார். இலங்கையில் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி, மற்றும் எச்எஸ்பிசி வங்கி ஆகியவற்றில் பணியாற்றியுள்ள அவர், பணியகத்தில் நிலவும் பல்வேறுபட்ட வடிவங்களிலான தன்னறிவுக்கு அப்பாற்பட்ட பாரபட்சம் தொடர்பில் ஒட்டுமொத்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தியதுடன், இதில் கலந்து கொண்டவர்களுக்கு தன்னறிவுக்கு அப்பாற்பட்ட பாரபட்சத்தை இனங்கண்டு கொள்வதற்கும், அவற்றுக்கு தீர்வு காண்பதற்கும் வழிகாட்டியுள்ளார். இடைச்செயற்பாடுகளைக் கொண்ட ஒவ்வொரு அமர்வின் போதும் தன்னறிவுக்கு அப்பாற்பட்ட பாரபட்சத்திற்கு தீர்வு கண்டு, சேர்க்கை அரவணைப்பை அதிகரிப்பதற்கான உறுதிமொழியை பங்கேற்றவர்கள் வழங்கினர். தன்னறிவுக்கு அப்பாற்பட்ட பாரபட்சம் தொடர்பான அறிமுகம் மற்றும் அவற்றுக்கான தீர்வு என்பன 2021 ஜூலை முதற்கொண்டு மும்மொழியிலான பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்புக்கான மாதாந்த மின்னஞ்சல் வழி பிரசுரமான “U&I for DE&I” மூலமாக குழும பணியாளர்களுடன் பகிர ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





ஜோன் கீல்ஸ் குழுமம் சிறுவர்களைக் கொண்டுள்ள எமது பெற்றோருக்கு உதவும் முகமாக 2021 செப்டெம்பர் 28 அன்று தொழில்தருநர் உதவியுடனான பிள்ளைப் பராமரிப்பு மையத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. ,து சேர்க்கை அரவணைப்பு சமத்துவம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் பணியகமாக மாறுவதற்கு மேலும் ,டமளிக்கும் எமது அர்ப்பணிப்புடனான உறுதிப்பாட்டை மேலும் எடுத்துக்காட்டுகின்றது. மகப்பேற்றுக்காக தாய் மற்றும் தந்தையருக்கு வழங்கப்படுகின்ற விடுப்பு நிறைவடைந்து அவர்கள் பணிக்கு மீண்டும் சீராக திரும்புவதற்கு உதவி, தொழில் புரியும் பெற்றோர் பணிக்கு வராமல் போகும் சந்தர்ப்பங்களைக் குறைத்து, எமது தொழிற்படையில் பெண்களை அதிகரித்துக் கொள்வதற்கு உதவுவதால், குழுமத்தின் பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு முயற்சிகளில் தொழில்தருநரின் ஆதரவுடனான பிள்ளைப் பராமரிப்பு ஒரு முக்கியமான ,லக்காகும்.

## புதுப்பிக்கப்பட்ட கொள்கை


குழுமத்தின் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான கொள்கையானது, இது தொடர்பான முறைப்பாட்டு மார்க்கங்களை விஸ்தரிப்பதற்காக 2021 ஆகஸ்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இது தொடர்பில் முறையே தமது மனித வள தலைமை அதிகாரிகள் மேற்பார்வையாளர்கள், குழுமத்தின் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான மீளாய்வுச் சபை, ‘Chairman Direct’ அல்லது குறைகேள் அதிகாரி ஆகியோரிடம் முறையிடும் தெரிவுகளுக்கு மேலதிகமாக, பாலியல் துன்புறுத்தல் அல்லது கொடுமைப்படுத்தல் சம்பவம் தொடர்பில் முறையிடுவதற்கு பின்வரும் நபர்களைத் தொடர்பு கொள்ளும் வசதியும் தற்போது பணியாளர்களுக்கு உள்ளது.

| பெயர் | பதவி மற்றும் வணிகப் பிரிவு |
|---|---|
| சுனேத் ஜெயமான்ன | நிதித் துறை தலைமை அதிகாரி, ஏசியன் ஹோட்டல்ஸ் அன்ட் புறொப்பட்டீஸ் |
| ஜெஹனி கனகராஜ் | நிதிக் கட்டுப்பாளர், சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் |
| துஷாரி திசாநாயக்க | ஆயுள் காப்புறுதி தொழிற்பாடுகளுக்கான சிரேஷ்ட முகாமையாளர், யூனியன் அஷ்ரன்ஸ் |
| நியோமல் பெரேரா | தலைமை தொழிற்பாட்டு அதிகாரி - SAP Solutions & Services, JKIT |
| ஷனீஸ் விஜேசிங்க | துணைத் தலைமை அதிகாரி - வர்த்தகநாமம் மற்றும் தர நிர்ணயம், CHML |
| சுதர்ஷனி பஸ்நாயக்க | முகாமையாளர் - ஊழியர் ஈடுபாடு/தொழில் சார் உறவுமுறைகள், JMSL |
| அனுஷ்க வீரரட்ண | தலைமை நிர்வாக அதிகாரி, லங்கா மரைன் சேர்விசஸ் |
| லொரெய்ன் லூக் | உதவி முகாமையாளர், மனித வளங்கள், ஜோன் கீல்ஸ் புறொப்பட்டீஸ் |

குழும செய்திகள்

## West Container Terminal-1





Sri Lanka Ports Authority (SLPA) மற்றும் Colombo West International Container Terminal (Private) Limited ஆகியவற்றுக்கு இடையிலான Build, Own and Transfer (BOT) உடன்படிக்கை 2021 செப்டெம்பர் 30 ஆம் திகதி, மேற்கு கொழும்பு துறைமுகமில் West Container Terminal-1 இன் அபிவிருத்தி தொடர்பாக நிறைவேற்றப்பட்டது.

## யூனியன் அஷூரன்ஸ்

காப்புறுதித் திட்டங்களைக் கொண்டுள்ளவர்கள் மற்றும் அவர்களுடைய அன்பிற்குரியவர்களுக்கு தனித்துவமான முதலீட்டு வாய்ப்பினை வழங்கி, ஆயுள் காப்புறுதியை அதனுடன் உள்ளிணைத்துக் கொள்ளும் வகையில் யூனியன் அஷூரன்ஸ் பீஎல்சி ஆனது 2021 ஜூலை 15 அன்று INVESTMENT+ ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. காப்புறுதித் திட்ட தவணை முதிர்ச்சியின் போது உத்தரவாதமளிக்கப்பட்ட மொத்த பலாபலனுடன், பிள்ளையின் கல்வி, புதிய வர்த்தக முயற்சியொன்றை ஆரம்பித்தல் அல்லது ஓய்வு கால நிதி என தேவை எதுவாக இருப்பினும் குறுகிய கால நிதியியல் இலக்குகளை அடையப்பெறுவதற்காக ஒரு மிகவும் உகந்த முதலீட்டுத் தீர்வாக INVESTMENT+ காணப்படுகின்றது.




6.1.2 யூனியன் அஷூரன்ஸ் பீஎல்சி, தொழிற்துறையின் முதலாவது வெகுமதிகள் மற்றும் அங்கீகாரத்திற்கான நிகழ்ச்சித்திட்டமாக Union Assurance Premier Club ஐ 2021 ஜூலை 2 அன்று ஆரம்பித்துள்ளது. உலகத் தரம் வாய்ந்த விற்பனைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவையை வெளிக்காண்பிக்கும் வகையில் செயற்படுகின்ற நிறுவனத்தின் காப்புறுதி ஆலோசர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கும் வகையில் இத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஜோன் கீல்ஸ் புரொப்பட்டீஸ்



Cinnamon Life கட்டடத் தொகுதியில் 30 அடுக்கு கொண்ட Grade-A அலுவலக இட வசதியில் 80% ஐ பயன்படுத்துவதற்காக 2021 ஆகஸ்ட் 4 அன்று ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீஎல்சி உடன் ஒப்பந்தம் ஒன்றை HCL Technologies ஏற்படுத்தியுள்ளது. தனது கட்டடத் தொகுதியில் அலுவலக இட வசதியில் பெரும்பகுதியை பயன்படுத்துவதற்காக முன்னிலை வகிக்கும் பல்தேசிய நிறுவனமொன்றை ஈர்த்துள்ள கொழும்பிலுள்ள முதலாவது A-தர அலுவலக கட்டடத் தொகுதியாக Cinnamon Life மாறியுள்ளது.




ஜோன் கீல்ஸ் புரொப்பட்டீஸ், Cinnamon Life இன் 'The Suites' குடியிருப்பு அடுக்குமனைகளின் திறப்புக்களை புதிய குடியிருப்பாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வினை 2021 ஜூலை 21 அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளது. இரண்டு முதல் நான்கு வரையான படுக்கையறைகளைக் கொண்ட அடுக்குமனைகளைக் கொண்ட 196 அடுக்குமனை நிர்மாணச் செயற்திட்டத்தின் பூர்த்தி மற்றும் கையளிக்கும் நடவடிக்கைளின் ஆரம்பம் கொழும்பின் முன்னணி நீர்நிலை முகப்புடனான கலப்பு நிர்மாணச் செயற்திட்டத்தில் ஒரு முக்கியமான சாதனை இலக்காக மாறியுள்ளது.

## சினமன் பெந்தோட்டை பீச்

'எமது பதவி நிலைகளுக்கு அப்பால் எமது தாயகத்தின் மீது அக்கறை கொள்ள வேண்டியது எமது கடமை' என்ற கருப்பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய பயணத்தில் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலாவது முயற்சியாக 2021 ஜூலை 13 அன்று சிரமதான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.









தடுப்பூசி ஏற்றும் நிகழ்வொன்று 2021 ஜூலை 14 மற்றும் 22 ஆகிய தினங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எமது அணிகளின் துணையுடன், வெளிச்சேவையமர்த்தப்பட்ட ஊழியர்கள் அடங்கலாக 92% பணியாளர்களுக்கு தற்போது கொவிட்-19 க்கு எதிரான தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

## மத்திய தொழிற்பாடுகள்




இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கிடையிலான இருபதுக்கு இருபது கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் வெற்றியாளர் யார் என்பதை அனுமானிக்கும் போட்டியொன்று 2021 ஜூலை 16 முதல் ஆகஸ்ட் 3 வரை மத்திய தொழிற்பாடுகளில் இடம்பெற்றது. John Keells Research ஐச் சேர்ந்த சஹ்றான் முனசிங்க அவர்கள் வெற்றி பெற்றதுடன், தனது பெயர் பொறிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் சீருடையையும் பரிசாகப் பெற்றுள்ளார்.

## ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டோமேஷன்




021 ஜூலை 21 அன்று இரு இடைச்செயற்பாட்டு ஸ்மார்ட்போட்களை பங்களித்ததன் மூலமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்கான இலங்கையின் உத்தியோகபூர்வ ஒலிபரப்பு பங்காளராக JKOA ஆனது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சனல் ஐ அலைவரிசை ஆகியவற்றுடன் கைகோர்த்துள்ளது. போட்டி நிகழ்வுகளின் அறிக்கைகள் மற்றும் முக்கிய சாராம்சங்களை படைப்பதற்காக பெறுபேற்றுத்திறன் ஆய்வு நிகழ்ச்சியின் போது இந்த ஸ்மார்ட்போட்கள் பயன்படுத்தப்பட்டன. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் ஊடக படைப்பாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு முழுமையான பயிற்சியையும், உதவியையும் இதற்காக அணி வழங்கியுள்ளது.



## சினமன் பே பேருவளை

ஹோட்டலின் ஊழியர்கள் மற்றும் சினமன் பெந்தோட்டை பீச், சினமன் சிற்றடல், ஹிக்கா டிரான்ஸ் பை சினமன் மற்றும் சினமன் வைல்ட் ஆகியவற்றின் ஊழியர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிகழ்வொன்றை 2021 ஜூன் 22 மற்றும் ஜூலை 23 ஆகிய தினங்களில் பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் களுத்துறை மாவட்டத்தின் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து சினமன் பே பேருவளை ஏற்பாடு செய்துள்ளது. பெந்தோட்டை மற்றும் பேருவளை பிரதேசத்திலுள்ள சினமன் ஹோட்டல்களின் ஊழியர்களுக்கு மொத்தமாக 500 கொவிட்-19 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.




## சினமன் டொன்வலி மாலைதீவு



இயற்கைச் சூழலைப் பேணிப் பாதுகாப்பதற்காக குறைத்தல், மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சி வாக்குறுதியின் அங்கமாக, 2021 ஜூலை 22 அன்று கண்ணாடியிலான தண்ணீர்ப் போத்தல்களை சினமன் டொன்வலி மாலைதீவு தனது ஹோட்டலில் அறிமுகப்படுத்தியுள்ளது. தனது ஹோட்டல்கள் அனைத்திலும் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்திக் பாவனையைக் குறைப்பதற்காக சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளின் ஒரு அங்கமாக இது காணப்படுகின்றது.




## எலிபன்ட் ஹவுஸ்

எலிபன்ட் ஹவுஸ், Zerotrash, ஜோன் கீல்ஸ் குழும சமூக தொழில்முயற்சியாண்மை செயற்திட்டமான Plasticcycle ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக நாடெங்கிலும் மீள்சுழற்சியை ஊக்குவித்து, பிளாஸ்திக் கழிவு முகாமைத்துவ நடைமுறைகளை சிறப்பாகக் கையாள்வதற்காக 2021 ஆகஸ்ட் 11 அன்று "Zerotrash Recyclable Plastic Collection Centre" என்பதை ஆரம்பித்துள்ளன.








2021 செப்டெம்பர் 1 அன்று உத்தியோகபூர்வ நிகழ்வின் ஆரம்பத்துடன், மூலோபாயம் மிக்க, துறை சார் குறிப்பிட்ட பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு தொடர்பான செயற்பாடுகள் மற்றும் முயற்சிகளின் தொடர் செயற்பாடுகளை ஆரம்பித்து, ONE JKH மீதான தனது குறிக்கோளை நுகர்வோர் உணவுகள் துறை மீளவும் வலியுறுத்தியுள்ளது. உத்தியோகபூர்வ நிகழ்வின் ஆரம்பத்திற்கு முன்பதான தொடர் செயற்பாடுகளில், 2021 ஆகஸ்ட் 12 அன்று தனிப்பயனாக்கப்பட்ட இணையக் கருத்தரங்கொன்று சிரேஷ்ட தலைமைத்துவ அணிக்காக யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பிற்கான தலைமை அதிகாரியான நதீஷா விஜேசிங்க அவர்கள் நடாத்தியமையும் அடங்கியிருந்தது. தயாரிப்பு மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் எவ்வாறு பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு சார்ந்த முயற்சிகளை தழுவியுள்ளன என்பதை விளக்கிய அவர், சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொண்டார். துறையின் முக்கிய பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 11 பேரைக் கொண்ட துணைக்குழுவொன்றையும் நிறுவியுள்ளதுடன், 2021 ஆகஸ்ட் 23 அன்று முதல் பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்பு தொடர்பில் 7 தினங்களுக்கான விழிப்புணர்வுப் பிரச்சாரமொன்றும் துறை மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது.

குழும செய்திகள்

## South Asia Gateway Terminals (SAGT)

யகிரல ஒதுக்கப்பட்ட காட்டுப் பிரதேசத்தில் மீள்காடாக்கத்திற்காக 3 வருட பங்குடமையொன்றிற்காக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நிலைபேற்றியல் மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை 2021 ஆகஸ்ட் 02 அன்று SAGT கைச்சாத்திட்டுள்ளது. பல்கலைக்கழகத்துடனான கூட்டு முயற்சியானது 2019 இல் அங்குரார்ப்பண மீள்காடாக்க செயற்திட்டமொன்றுடன் ஆரம்பிக்கப்பட்டது.













தனது தொழிற்பாடுகளில் நிலைபேண்தகு வணிக நடைமுறைகளை முன்னெடுப்பதில் கொண்டுள்ள அர்ப்பணிப்பின் மற்றுமொரு படியாக, SAGT ஆனது 2021 ஆகஸ்ட் 26 மற்றும் 27 இல் முனையத்தில் வீதி மேற்பரப்பு செயற்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது. இலங்கையில் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்திக் கழிவுகளை மாற்றியமைக்கின்ற ஒரு புத்தாக்கமான தீர்வாக, பிளாஸ்திக் மூலமாக மாற்றம் செய்யப்பட்ட தார் கொங்கிரீட் பாவனையை இந்த வீதி மேற்பரப்பு செயற்திட்டம் முன்னெடுக்கின்றது. இந்த தார் கலவையானது படிம எரிபொருள் தார்க் கலவையில் குறிப்பிட்ட ஒரு சதவீதத்திற்கு பதிலாக பிளாஸ்திக் கழிவை பயன்படுத்துவதால், பச்சைவீட்டு வாயுக்களை குறைப்பதற்கு இடமளிக்கின்றது.

## பிளாஸ்திசைக்கிள்







2021/22 இற்கான இரு அமர்வுகளில் முதலாவது அமர்வினை 2021 செப்டெம்பர் 15 அன்று குழுமத்தின் நிலைபேண்தகமை முயற்சிகளின் வழிநடாத்துனர்களுக்காக பிளாஸ்திசைக்கிள் ஏற்பாடு செய்துள்ளது. இக்காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள முயற்சிகள் தொடர்பில் வணிகப் பிரிவுகள் மற்றும் துறைகளுக்கு பிளாஸ்திசைக்கிள் அறியத்தரும் ஒரு தளமாக இந்த அமர்வுகள் அமைந்துள்ளது மட்டுமன்றி, பிளாஸ்திக் மாசுபாட்டைக் குறைப்பது தொடர்பான தமது முயற்சிகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட தகவல் விபரங்களை குழும நிறுவனங்கள் பகிர்ந்து கொள்ளவும் களம் அமைத்துள்ளது. இணை நிறுவனங்களான South Asia Gateway Terminals மற்றும் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி ஆகியவற்றின் நிலைபேண்தகு முயற்சிகளுக்கான தலைமை அதிகாரிகள் மற்றும் குழும நிலைபேண்தகமை அணி ஆகியோரும் இந்த அமர்வில் இணைந்துள்ளனர்.

## கீல்ஸ்


உரையாடல் ஈடுபாட்டு வணிகத்தில் கால்பதிப்பதற்கான ஒரு முயற்சியாக உறுதிப்படுத்தப்பட்ட chatbot ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காக சர்வதேசரீதியில் செயற்கை நுண்ணறிவு வலுவூட்டப்பட்ட உரையாடல் ஈடுபாட்டு தளமான “Yellow.AI“ உடன் புத்தாக்கமான பங்குடமையொன்றை கீல்ஸ் ஏற்படுத்தியுள்ளது. சில்லறை பல்பொருள் அங்காடித் தொடர் ஒன்றால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது வாட்ஸ்அப் உறுதிப்படுத்தப்பட்ட chatbot ஆக இது மாறியுள்ளதுடன், 2021 ஆகஸ்ட் 27 அன்று சமூகத் தளங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.







6.14.2 தொற்றுநோயின் போது எமது பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு நாம் அதிமுக்கியத்துவம் அளிக்கின்றோம். எமது பணியாளர்கள் அனைவரும் சாத்தியமான அளவுக்கு பாதுகாக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக, ∴ போர்ப்ஸ் வீதி சனசமூக நிலையத்தில் 2021 செப்டெம்பர் 8 முதல் 10 வரை கீல்ஸ் அணிக்காக பிரத்தியேகமான தடுப்பூசி ஏற்றும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மொத்தமாக 528 ஊழியர்களுக்கு இந்த 3 நாட்களில் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன், இதன் மூலமாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ள பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 78.6% ஆக அதிகரித்துள்ளது.

## ஒக்டேவ்





மேம்பட்ட தொழில்நுட்ப பகுப்பாய்வு வல்லுனர்களிடமிருந்து கேட்டல், அறிதல் மற்றும் இடைத்தொடர்புபடல் வாய்ப்புக்களுக்கான OCTAVE INSIGHTS இணையக் கருத்தரங்குத் தொடரின் அண்மையில் இரு நிகழ்வுகளில் “Data Science in Football: from Hoax to Game Changer“ மற்றும் “Making Boats Fly with AI“ ஆகிய நிகழ்வுகள் முறையே 2021 ஆகஸ்ட் 6 மற்றும் 2021 ஆகஸ்ட் 20 ஆகிய தினங்களில் நிகழ்நிலையாக இடம்பெற்றன.

## டீ ஸ்மோல் ஹோல்டர் ஃபெக்டரீஸ் பீஎல்சி





தேயிலைத் தொழிற்சாலைகளையும் சேர்ந்த அனைத்து 365 ஊழியர்களுக்கும் தடுப்பூசி ஏற்படுத்தும் நடவடிக்கைகளை 2021 ஆகஸ்ட் 25 அன்று டீ ஸ்மோல்ஹோல்டர் ∴பெக்டரீஸ் பூர்த்தி செய்துள்ளது. வைரஸ் பரவுவதை தடுப்பதில் விசேட ஆர்வம் காண்பித்த பிரதேச வைத்திய சுகாதார அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோரின் உதவியுடனேயே இது சாத்தியமாகியுள்ளதுடன், தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் பாதிப்பின்றி முன்னெடுக்கப்படுவதையும் உறுதி செய்துள்ளது.

## ஜோன் கீல்ஸ் பீஎல்சி







இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டைக் குறைக்கும் பொதுவான இலக்கினை அடையப்பெறுவதற்காக ஜோன் கீல்ஸ் பீஎல்சி ஆனது பிளாஸ்திசைக்கிளுடன் கைகோர்த்துள்ளது. AGC Innovate இன் பிளாஸ்திக் மாற்றியமைக்கப்பட்ட தார் கொங்கிரீட் பாவனைக்காக, 2021 ஆகஸ்ட் 02 அன்று முத்துராஜவலையிலுள்ள தனது களஞ்சியசாலைக்குச் செல்லும் வீதியை மீள்கட்டமைக்கும் பணிகளை ஜோன் கீல்ஸ் பீஎல்சி பூர்த்தி செய்துள்ளது. கழிவகற்றும் இடங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்ற மீள்சுழற்சி செய்யப்பட முடியாத பிளாஸ்திக் கழிவுகளைக் கொண்டு, பிளாஸ்திக் மாற்றியமைக்கப்பட்ட தார் கொங்கிரீட் ஆனது பண்படுத்தப்பட்டு வலுவான தார்க் கலவையாக மாற்றப்பட்டு, வீதிகள், வாகனத் தரிப்பிடங்கள், வாகனம் செல்லும் பாதை மற்றும் பெருந்தோட்ட பாதைகளை நிர்மாணிக்க உபயோகிக்கப்படுகின்றது.


## ஜோன் கீல்ஸ் லொஜிஸ்டிக்ஸ்


அணியின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் கொண்டுள்ள அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக, 2021 ஆகஸ்ட் 6 முதல் 13 வரை விநியோக மையங்களிலும், ஆகஸ்ட் 31 அன்று தலைமை அலுவலகத்திலும் கொவிட்-19 தடுப்பு வழிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் தொடர் அமர்வுகளை ஜோன் கீல்ஸ் லொஜிஸ்டிக்ஸ் ஏற்பாடு செய்துள்ளது. வைரஸ் பரவும் சந்தர்ப்பங்கள், பரவுவதை தணிவிக்கும் வழிமுறைகள், கொவிட்-19 இற்கு எதிரான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் போன்ற விடயங்களில் இந்த அமர்வுகள் மூலமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



## சினமன் கிராண்ட்







சினமன் கிராண்ட் கொழும்பு, 2021 செப்டெம்பர் 14 அன்று “அறைகளைச் சுத்தப்படுத்துகின்றவர்களைப் போற்றுவதற்கான சர்வதேச தினம் 2021” இனை கொண்டாடியுள்ளது. சினமன் கிராண்ட் மற்றும் சினமன் லேக்சைட் ஆகியவற்றின் பொது முகாமையாளரான திரு. கமல் முனசிங்க அவர்களின் உரையுடன் இந்த நிகழ்வு ஆரம்பமானதுடன், கடின உழைப்பு, முயற்சிகள் மற்றும் பங்களிப்பு ஆகியவற்றுக்காக அறைகளைச் சுத்தப்படுத்தல் மற்றும் சலவை அணிகளின் ஒட்டுமொத்த அங்கத்தவர்களையும் அவர் பாராட்டினார். படுக்கையை அலங்கரிக்கும் போட்டியொன்றும் செப்டெம்பர் 17 அன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன், அறைகளைச் சுத்தப்படுத்தல், வரவேற்பு அலுவலகம் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளைச் சேர்ந்த 16 போட்டியாளர்கள் 2021 ஆம் ஆண்டின் வெற்றியாளராக முடிசூடிக் கொள்வதற்காக நேருக்கு நேர் மோதினர்.

## ஜோன் கீல்ஸ் ஐடி (JKIT)




FRIMI, வணிகர், இணைய வங்கிச்சேவை, மொபைல் வங்கிச்சேவை மற்றும் நிர்வகிப்பு இணைய முகம் ஆகியவற்றின் டிஜிட்டல் வங்கிச்சேவை பயன்பாடுகளை ஒன்றுபட்டு நவீனமயப்படுத்துவதற்காக 2021 ஜூலை 27 அன்று நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியுடன் மூலோபாய ஒப்பந்தமொன்றில் JKIT கைச்சாத்திட்டுள்ளது. நிறுவனம் கொண்டுள்ள தொழில்நுட்ப அறிவாற்றல், NTB வங்கியின் கள அறிவு காரணமாகவே JKIT ஐ NTB தெரிவு செய்துள்ளதுடன், இந்த முயற்சிக்கான மிகச் சிறந்த தெரிவாகவும் அதனை மாற்றியுள்ளது. DevOps மற்றும் Agile Scrum முறைமைகளை பயன்படுத்தி, நுண்சேவைகள் கட்டமைப்பில் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயனபடுத்தி இத்தீர்வுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

## JKH உதவித்தொகைத் திட்டத்திற்கான பாராட்டு குறிப்பு

1991 இல் நிறுவப்பட்ட, துழாெ முநநடடள பல்கலைக்கழக உதவித்தொகைத் திட்டம், இளங்கலை படிப்புக்காக உள்ளூர் பல்கலைக்கழகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் நிர்வாகமற்ற ஊழியர்களின் குழந்தைகளுக்கு நிதி உதவி வழங்குகிறது. 1996 இல் திரு ஜி.ஆரின் மகன் ராஜித் உடுகம்பொல. Whittal Boustead Ltd நிறுவனத்தில் பணியாற்றிய உடுகம்பொல, John Keells பல்கலைக்கழக உதவித்தொகை திட்டத்தைப் பெற்றவர்களில் ஒருவர்.



சமீபத்தில் அந்த ஆண்டு புலமைப்பரிசில்களை வழங்கிய JK Times இதழில் வந்திருந்த ராஜித், இப்போது Adelaide Plains Council in South Australia பொது மேலாளர் - நிதி மற்றும் வணிகம், பாராட்டுதலுடன் தலைவரை அணுகினார். துமுர் வழங்கிய நிதி உதவி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தனது வணிக நிர்வாக இளங்கலை, Sri Lanka Institute of Marketing and Chartered Accountancy (ICASL) தேர்வுகளிலிருந்து டிப்ளோமாவை வெற்றிகரமாக முடிப்பதில் முக்கிய பங்கு வகித்தது என்பதை அவர் எடுத்துரைத்தார். 2004 ஆம் ஆண்டில் அவரது கல்விப் பாராட்டுகள் அவருக்கு மாஸ்டர் ஆ∴ப் பைனான்ஸ் திட்டத்தை முடிக்கவும், பின்னர் ஆஸ்திரேலியாவில் குடியேறவும் வழி வகுத்தது.




தற்போது, அவர் கவுன்சிலின் நிதிச் சேவைத் துறையின் மேலாண்மைக்கு முதன்மையாக பொறுப்பேற்றுள்ளார் மற்றும் கவுன்சிலின் மூலோபாய நிதி, மானியங்கள் மற்றும் மானிய நிர்வாகம் மற்றும் மதிப்பீடு மற்றும் சொத்து தரவுத்தள பராமரிப்பு ஆகியவற்றை மேற்பார்வையிடுகிறார்.


ராஜித்துக்கு தனிப்பட்ட முறையில் பதிலளித்த தலைவர், பல ஆண்டுகளாக John Keells University உதவித்தொகைத் திட்டம் எங்கள் மதிப்புமிக்க பணியாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கு தேவையான நேரத்தில் ஆதரவளிப்பதில் குழு உறுதியளிக்கும் பல வழிகளில் ஒன்றாகும், மேலும் ராஜித்தின் வெற்றிக் கதை உண்மையில் குழுவை வலுப்படுத்துகிறது JKH பல்கலைக்கழக உதவித்தொகைத் திட்டத்திலிருந்து விரும்பிய முடிவு.

விளையாட்டுக்கள், கழகங்கள் மற்றும் சங்கங்கள்

## பேச்சாளர்கள் கழகம்

JKH பேச்சாளர்கள் கழகமானது கிஹான் புலொக் மற்றும் மனோ கொரியா ஆகியோர் பங்குபற்றும் "Behind the Mic" தொடர் நிகழ்வின் முதலாவது நிகழ்வினை 2021 ஜுலை 1 அன்று பி.ப 5.00 மணி முதல் Microsoft Teams வழியாக ஜோன் கீல்ஸ் குழும ஊழியர்களுக்காக பிரத்தியேகமாக நடாத்தியுள்ளது. இந்த இரு நகைச்சுவை பேச்சாளர்களும் தமது பாடசாலை நாட்கள் முதற்கொண்டு, தாம் இன்று இந்த மட்டத்தை அடைந்தமை வரையில் ஒட்டுமொத்த பயண அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டதுடன், நகைச்சுவை ததும்பும் வகையில் எவ்வாறு பேச்சு அல்லது படைப்பாக்கம் ஒன்றை வழங்குவது என்பது தொடர்பில் பயன்மிக்க ஆலோசனைகளை வழங்கி பங்குபற்றியோருடன் இடைத்தொடர்பாடல்களை மேற்கொண்டதுடன், புதியப் உள்ளடக்க தயாரிப்பாளராக எவ்வாறு தொழில் ஒன்றை ஆரம்பிக்கலாம் என்பதையும் சிறப்பாக விளக்கினர்.






## JKH பேச்சு வன்மையாளர்கள் கழகம் அதன் முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியுள்ளது!

2021 செப்டெம்பர் கடைசி வாரத்தில் JKH பேச்சு வன்மையாளர்கள் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி, 'ஒரு வருடம் கடந்துள்ளது, பயணம் தொடரும்' என்ற தலைப்பில் பல நிகழ்வுகள் மற்றும் வெளியீடுகளை முன்னெடுத்தோம். வருடாந்த செய்திமடலின் முதலாவது வெளியீடு 2021 செப்டெம்பர் 27 அன்று வெளியிடப்பட்டதுடன், இது எங்கள் கடந்த கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள், கழகம் தொடர்பான ஒரு மேலோட்டமான கண்ணோட்டம் மற்றும் நாங்கள் வழங்கும் தயார்படுத்தப்பட்ட கற்றல் பாதை ஆகியவற்றை பட்டியலிட்டுள்ளது. 2021 செப்டெம்பர் 28 அன்று, எங்கள் அங்கத்தவர்களின் கடந்த ஆண்டு அனுபவங்களைப் பற்றிய சான்றுகளின் வீடியோ தொகுப்பை வெளியிட்டோம்.

இவ்வாரத்தின் முக்கிய நிகழ்வான பேச்சுப் போட்டியின் இறுதிப்போட்டியானது 2021 செப்டெம்பர் 30 அன்று மாலை 5.00 மணி முதல் நடைபெற்றது. இந்த போட்டியில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டதுடன், முதல் மூன்று ஸ்தானங்களைப் பெற்ற பேச்சாளர்கள் பார்வையாளர்களுக்கு முன்னால் முற்கூட்டியே தயார்படுத்தப்பட்ட உரையை நிகழ்த்தினர். இறுதிப் போட்டியாளர்களாக பியூரியா சமன்மலி, அதிகாரி - MIS, கீல்ஸ் ஃபூட் புரொடக்ட்ஸ் பிஎல்சி திமாஷா ரஞ்சன், அதிகாரி - வர்த்தகநாம தர நிர்ணயம், சினமன் ஹோட்டல் மெனேஜ்மென்ட் லிமிட்டெட் மற்றும் உதேஷ் குருகுலசூரிய, உதவி முகாமையாளர் - பயிற்சி மற்றும் மேம்பாடு, சினமன் கிராண்ட் கொழும்பு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


ஜோன் கீல்ஸ் குழுமத்தின் நிறுவன தகவல் தொடர்பாடல்களுக்கான தலைமை அதிகாரியும், பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் சேர்க்கை அரவணைப்புக்கான குழுமத் தலைமை அதிகாரியுமான குமுது முனசிங்க, சினமன் ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகளின் உள்ளடக்க மூலோபாயம், மக்கள் தொடர்புகள் மற்றும் தொடர்பாடல்களுக்கான பணிப்பாளரான பிரமுக்ஷி காரியவசம், கீல்ஸ் ஃபூட்ஸ் புரொடக்ட்ஸ் பிஎல்சி இன் வர்த்தகநாம முகாமையாளரான ரஸல் வலன்டைன் ஆகியோர் நடுவர் குழுவில் இடம்பெற்றிருந்தனர். தலைமை பணியாளர்கள் அதிகாரியான இசுரு குணசேகர திறன்மிக்க தகவல்தொடர்பாடலின் முக்கியத்துவம் குறித்து உரை நிகழ்த்தியதுடன், கழகம் வழங்கும் அனுபவ வெளிப்பாடு மற்றும் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்த அனைவரையும் ஊக்குவித்தார்.

பேச்சுப் போட்டியின் வெற்றியாளராக உதேஷ் குருகுலசூரிய அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், ஒரு சோடி Samsung Galaxy Buds சாதனத்தைப் பரிசாகப் பெற்றார். அவர் பொது வாக்குகளால் 'மிகவும் பிரபலமான பேச்சாளர்' என்ற பட்டத்தையும் வென்றார். செய்திமடலில் குறுக்கெழுத்து போட்டியொன்று இடம்பெற்றதுடன், அதன் வெற்றியாளரான ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டோமேஷன் வாடிக்கையாளர் சேவை தலைமை அதிகாரியான ஜொனதன் அபேவர்தன அவர்களின் பெயரும் இந்த இறுதிப் போட்டியில் வெளிப்படுத்தப்பட்டது. இதில் பங்கேற்றவர்கள் வெறுங்கையுடன் செல்லவில்லை, ஏனென்றால் அவர்கள் நாக்குப் புரளும் சொல் வித்தை விநோத விளையாட்டில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்தது. ஜேகே மார்க்கெட்டிங் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் அதிகாரியான பாக்யா டயஸ் அவர்கள் இதில் வெற்றி பெற்றார். அவர்கள் மூவரும் கீல்ஸிடமிருந்து பரிசு வவுச்சர்களைப் பெற்றனர்.










JKH பேச்சு வன்மையாளர்கள் கழக நிர்வாக சபையானது இது போன்ற நிகழ்வுகள் எங்கள் ஊழியர்களை அங்கத்தவராக்கி அவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்த ஊக்குவிக்கும் என்று நம்புகிறது! ஆர்வமுள்ளவர்கள் இங்கே இணைந்து கொள்ளலாம்.

## சர்வதேச நட்பு தினம் இன்ஸ்டாகிராம் போட்டி




LifeatJKH

824 likes

2021 ஜுலை 30 இல் சர்வதேச நட்பு தினத்தைக் கொண்டாடும் வகையில், 2021 ஜுலை 26 முதல் 30 வரை இன்ஸ்டாகிராம் போட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டதுடன், தாம் தமது அலுவலக நண்பர்கள் தொடர்பில் எதனை தற்போது அவர்களின் துணையின்றி தவிக்கும் உணர்வு அல்லது அவர்களிடமிருந்து மிகவும் எதிர்பார்ப்பது என்பதை விபரிக்கும் சிறு தலைப்புடன் தமது மற்றும் தமது அலுவலக நண்பர்களின் புகைப்படங்களை பகிருமாறு குழுத்தின் மத்தியில் அனைத்து ஊழியர்களும் ஊக்குவிக்கப்பட்டனர். Informate நிறுவனத்தைச் சேர்ந்த ஷெனால் பெரேரா அவர்கள் தனது இடுகைக்காக அதிக எண்ணிக்கையான லைக்குகளுடன் போட்டியின் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

## ஜேகே டைம்ஸ் 2 ஆவது காலாண்டு வினாவிடைப் போட்டியின் வெற்றியாளர

**மகேஷி விமலகுணரட்ண**

**6 வினாக்களுக்கும் சரியான பதிலை வழங்கி அற்புதமான பரிசுகளை வெல்லுங்கள்!**
நீங்கள் செய்ய வேண்டியது ஜேகே டைம்ஸ் இன் சமீபத்தைய பதிப்பின் அடிப்படையில் மிகவும் இலகுவான 6 வினாக்களுக்கு நீங்கள் சரியான பதில்களை வழங்கவேண்டியது மாத்திரமே! உங்களது பெயர், வணிகப் பிரிவு மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு உங்களுடைய பதில்களை 2021 நவம்பர் 19 அன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு isuri.jkh@keells.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.



## வினாவிடைப் போட்டி

1. அண்மையில் நிறைவடைந்த ஆங்கில மொழி புலமைப்பரிசிலாளர்களுக்கான நிகழ்நிலை பேச்சுப் போட்டியின் இறுதிப் போட்டியின் தலைப்பாக அமைந்தது என்ன?
2. குழுமத்தின் இணை நிறுவனமொன்று எந்த இடத்தில் அமைந்துள்ள ஒதுக்கப்பட்ட காட்டில் மீள்காடாக்கத்திற்காக அண்மையில் தன்னை அர்ப்பணித்திருந்தது?
3. WOICE அங்குரார்ப்பண அமர்வின் பேச்சாளராக கலந்து சிறப்பித்த சிறப்பு விருந்தினரின் பெயர் என்ன?
4. ஜோன் கீல்ஸ் குழும பெற்றோர்களுக்கான வலையமைப்பின் பெயர் என்ன?
5. Cinnamon Life இல் 30 அடுக்கு புரபண்டிபு அலுவலக இட வசதியில் 80% இட வசதியை பெற்று உபயோகிப்பதற்காக ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி உடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ள நிறுவனம் எது?
6. பிளாஸ்திக்கிலிருந்து மாற்றப்பட்ட தார் கொங்கிரீட்டை உபயோகித்து செயற்திட்டங்களை பூர்த்தி செய்துள்ள இரு குழும நிறுவனங்கள் எவை?

இந்த செய்திமடல் ஜோன் கீல்ஸ் குழும நிறுவனங்களுக்கு இடையிலான தகவல் விபர பகிர்வு நோக்கங்களுக்காக செய்யப்படுகின்றது.

**இசுரி அபேவிக்ரம**
நிர்வாகி - நிறுவன தொடர்பாடல்கள் பிரிவு

117 சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02
தொ.பே: +94 (0) 11 230 6191
மின்னஞ்சல்: jkh@keells.com
இணையத்தளம்: www.keells.com